www.newwisdomministries.com

# ஞானஒலி





## உதவுவதே உயிர்க்குணம்

ஞானம் 6 - ஒலி 24- 11.06.2023

# கொடுங்கள்...கொடுக்கப்படும்...கொடுங்கள்





**தலையங்கம்**

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

அன்பிற்கினிய ஞான ஒலி இணைய இதழின் வாசகப் பெருமக்களே உங்கள் அனைவரையும் இறைமகன் இயேசுவின் பெயரில் வாழ்த்துகின்றேன். உங்களின் இலட்சியம் நிறைவேற செபிக்கின்றேன்.

நாம் எண்ணுகின்ற எண்ணமும், செய்யும் செயலும், சொல்லும் சொல்லும் நம்மிடமே திரும்பி வரும். ஏனென்றால் படைக்கப்படும் எதுவும் படைப்பவரிடமே திரும்பி வரவேண்டும் என்றே விதிக்கப்பட்டுள்ளது. அது கடவுளின் திட்டம். அவரின் சாயலில் படைக்கப்பட்ட நம்மிடமிருந்து புறப்படும் அனைத்தும் நம்மிடமே திரும்பும்.

எது புறப்படுகிறதோ, அதுவே திரும்பி வரும். நல்லது நல்லதாக, தீயது தீயதாக. ஆகவேதான் இயேசு பெருமான் அனைவரையும் அன்பு செய்யுங்கள். அனைவருக்கும் நன்மைபுரியுங்கள், தீயதைச் செய்யாதீர்கள். தீர்ப்பிடாதீர்கள் என்றார். காரணம் நன்மை வேண்டுமென்றால் பிறருக்கு நன்மை செய்யுங்கள். அது பன்மடங்காகத் திரும்பி உங்களிடமே வரும். அதுவும் அளவில்லாமல். அதேபோல் தீமையும் அளவில்லாமல் திரும்பி வரும் நிச்சயமாக. காலதாமதமானாலும் வந்தே தீரும்.

பிறர் உங்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று விரும்பினால், முதலில் நீங்கள் பிறருக்கு நன்மை செய்யுங்கள் என்ற தங்க விதியை இயேசு தந்தார். இன்று வெள்ளி விதி என்று ஒன்றைச் சொல்லுகிறார்கள். அது என்னவென்றால், பிறர் உங்களுக்குத் தீமை செய்யக்கூடாது என்று விரும்பினால், முதலில் நீங்கள் யாருக்கும் தீமை செய்யாதீர்கள் என்பதாகும்.

மொத்தத்தில், நம்மைச் சுற்றி இருக்கும் இயற்கை, உயிரினங்கள், ஜீவராசிகள் அனைத்தையும் அன்பு செய்யவும், அவற்றிற்கு நம்மால் ஆன நன்மையை எப்போதும் செய்யவேண்டும. நாம் நிம்மதியாக இருக்க வேண்டுமென்றால், நலம் பெற வேண்டுமென்றால், பிறருக்காக வாழ்ந்தால்தான் அது நடக்கும். வேறு வழியே இல்லை. இதைத்தான் தனது இறுதி நற்செய்தியாக மரண வாக்குமூலமாக இயேசு கல்வாரியில் வாழ்ந்து காண்பித்தார்.

இன்று நாம் வாழும் வாழ்க்கை, நாம் அனுபவிக்கும் அனைத்தும் பலரின் பங்களிப்பாகும். நாம் அணியும் செருப்பு முதல், குண்டூசி வரைக்கும எதுவும் நமது உழைப்பினால் அல்ல. அனைத்தும் இந்த

பேரண்டத்தின் நற்கொடைகளாகும்.

அதற்கு நாம் செய்யும் பிரதிபலன் என்னவென்றால், நாம் பிறருக்கு எவ்வளவு உதவியாக இருக்க முடியுமோ? அவ்வளவு பேருதவி செய்து கொண்டேயிருக்க வேண்டும். அதுவே நம் மீது சுமத்தப்பட்ட கடமை.

கொடுத்துச் சிவந்த கரங்களைக் கொண்டவர்ளே இன்றும் இயற்கையாக மாறி நிற்கின்றார்கள். அதுவே அவர்களுக்குக் கிடைத்த நித்திய நிலை. அழிவில்லாத ஆனந்த நிலை.

எம்ஜிஆர் அவர்களைப் பொன்மனச் செம்மல் என்று கூறுவர். காரணம் அவர் ஏழை மக்களுக்குச் செய்த நன்மைகள்தான். அவர் வீட்டுக்கு யார் சென்றாலும் நிச்சயம் சாப்பாடு உண்டு . அவர் முதலில் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் நாடகக் குழுவில் 100 ரூபாய் மாதச் சம்பளத்திற்கு வேலை செயது வந்தார். பிறகு அவர் பிரபலமான நடிகரானவுடன் என்.எஸ்.கிருஷணன் அவர்கள் எம்ஜிஆரிடம், நீ வாங்கும் சம்பளம் ஏழை மக்களின் பணம். அவர்கள் காலணா கொடுத்து உன் திரைப்படத்தைப் பார்க்கவில்லை என்றால் உனக்கு இவ்வளவு சம்பளம் கிடைக்காது. ஆகவே அந்தப் பணத்தைக் கொண்டு ஏழை மக்களுக்கு உதவி செய் என்றாராம். தனது தாராள குணம் அவரின் ஆசான், என்.எஸ்.கிருஷ்ணனிடமிருந்து கற்றுக் கொண்டது என்று எம்ஜிஆர் கூறுவாராம்.

ஒருமுறை என்.எஸ்.கிருஷ்ணன் வீட்டில் ஒருவன் திருட வந்தான். கொலைப்பசியோடு வந்த அவன், சமையல் அறைக்குச் சென்று சாப்பிடும்போது பாத்திரங்கள் உருண்டன.

அதைக் கேட்டு அங்கு வந்த என.எஸ்.கிருஷ்ணன்,...இங்கு என்ன செய்கிறாய் என்று அவனைக் கேட்டார். அவனும், ஐயா...சாப்பிட்டு மூன்று நாளாகிவிட்டது. அதனால் இங்கு திருடிச் சாப்பிட வந்தேன் என்றானாம். அதற்கு அவர் அவனை நன்றாகச் சாப்பிட வைத்துவிட்டு, இன்றுமுதல் நீதான் என் கார் டிரைவர் என்று அவனுக்கு வேலையும் கொடுத்து, தன் பணத்தையும் அவனிடம் கொடுத்து பத்திரமாக வைக்கச் சொல்வாராம்.


லட்மிகாந்தன் கொலை வழக்கில் சிறை சென்று, விடுதலையாகி, திரைப்படம் எடுத்து பெரும் நஷ்டம் அடைந்தார். கடும் வருமை. சொத்து எல்லாம் போய்விட்டது, அவரிடம் ஒரே ஒரு வெள்ளி டம்ளர் மட்டுமே இருந்தது. ஒரு நாள் காலை அவரது மனைவி டி.ஏ.மதுரம் அந்த வெள்ளி டம்ளரில் காபி கொண்டு வந்து அவருக்குக் கொடுத்தார் அதை வாங்கி அவர் குடித்துக் கொண்டிருக்கும்போது, அவரைத்தேடி ஒருவர் வந்து அவரின் மகளின் திருமண அழைப்பிதழ் கொடுத்து அழைத்தார். உடனே அவர் தான் இடது கையில் பிடித்து காபி குடித்துக் கொண்டிருந்த அந்த வெள்ளி டம்ளரை இந்தா இதை வைத்துக் கொள் என்று அவரிடம் கொடுத்தாராம்.

அப்போது அவரது மனைவி டி.ஏ.மதுரம் ஏங்க என்ன காரியம் செய்றீங்க என்று சத்தம் போட்டார். பரவாயில்லை, நம்மிடம் இருந்தது இந்த ஒரு வெள்ளி டம்ளர்தான். நம்மிடம் வந்த அனைவருக்கும் இல்லை என்று சொல்லாமல் உதவி செய்துள்ளோம். இருந்தது இந்த டம்ளர்தான் அதனால்தான் அதைக் கொடுத்தேன் என்றார். அதற்கு அவரது மனைவி....கொடுப்பதை வலது கையில் கொடுத்தால்தான் அவருக்கு மரியாதை, ஆனால் நீங்கள் உங்கள் இடது கையால் கொடுத்துவிட்டீர்களே?..இது நல்லாவா இருக்கு? என்று சொல்ல அதறகு என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள்...இல்லமா...அந்த வெள்ளி டம்ளரை வலது கைக்கு மாற்றுவதற்குள் இந்த மனம் மாறினாலும் மாறிடும்...அதனால்தான் அதற்கு இடம்கொடுக்காமல் தாமதம் செய்யாமல் உடனே கொடுத்துவிட்டேன் என்றாராம் அவர்....

கொடுப்பவர்களின் உள்ளத்தில்தான் தெய்வம் சந்தோஷமாகக் குடிகொள்ளும். அதனால்தான் வலது கை செய்வதை இடது கைக்குக்கூட தெரியாது பார்த்துக் கொள்ள வேண்டும். அந்தக் கள்ளத்தனம் இருந்தால்தான் இறைவன் நம்மில் குடிகொள்ள ஓடோடி வருவார். எத்தனை கோடி மெழுகுதிரிகளை பற்ற வைத்தாலும், அந்தக் மெழுகின் தீ குறையாது. அதுபோல்தான் கொடுக்கும் பேருள்ளங்கள் அட்சய மனிதர்கள்

# விவிலியம் அறிவோம்





## பாரான் பாலைவனத்தில் மக்களின் கிளர்ச்சி

சீனாய் பாலைவனத்தைவிட்டு புறப்பட்ட இஸ்ரயேல் மக்கள் பாரான் பாலைநிலத்தில் காதேசுபர்னேயா என்ற இடத்தில் பாளையம் இறக்குகின்றனர் (இச 1:19). இந்த இடம் சீனாய் மலையிலிருந்து ஏறக்குறைய இரண்டு வாரம் பயணத்தில் வந்துசேரக்கூடிய இடம். இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை உளவு பார்ப்பதற்காகத் தற்காலிகமாக அங்கே பாளையம் இறக்குகின்றனர். ஆண்டவர் மோசேயிடம் வாக்களிக்கப்பட்ட நாட்டை உளவு பார்க்க ஆட்களை அனுப்பப் பணிக்கின்றார். இஸ்ரயேல் மக்களும் மோசேயிடம் நாட்டை உளவு பார்க்க ஆட்களை அனுப்பக் கேட்கின்றனர். மோசே குலத்திற்கு ஒருவர் என பன்னிரு குலங்களிலிருந்தும் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து கானான் நாட்டை உளவு பார்க்க அனுப்புகின்றார். அவர்களிடம், நீங்கள் நெகேபுக்குச் சென்று அதற்கு அப்பால் மலைநாட்டுக்குப் போங்கள்; அந்த நாடு எப்படியிருக்கிறது, அங்கு வாழும் மக்கள் வலிமையுள்ளவரா வலிமையற்றவரா, அவர்கள் பலரா சிலரா, அவர்கள் குடியிருக்கும் நாடு வளமையானதா வளமையற்றதா, அவர்கள் தங்கியிருக்கும் நகர்கள் பாளையங்களா கோட்டைகளா, அந்த நாடு செல்வம்மிக்கதா ஏழ்மையானதா, மரங்கள் அங்கு உண்டா இல்லையா என்று பார்த்து வாருங்கள்; துணிவுடன் இருங்கள்; அந்நாட்டின் கனிகள் சிலவற்றைக் கொண்டு வாருங்கள் (எண் 13:17-20) எனக் கூறி அனுப்புகின்றார்.

உளவு பார்க்க அனுப்பப்பட்டவர்களில் யூதா குலத்தைச் சார்ந்த எப்புன்னேயின் மகன் காலேபும், எப்ராயீம் குலத்தைச் சார்ந்த நூனின் மகன் ஓசேயாவும் முக்கியமானவர்கள். ஓசேயா மோசேயின் ஊழியராகச் செயல்பட்டவர் (காண்கவிப 24:13). அவருக்கு மோசே யோசுவா என்ற பெயரைச் சூட்டியிருந்தார். அவர்தான் இந்தக் குழுவிற்குத் தலைமையேற்றுச் சென்றிருக்கவேண்டும். அவர்கள் பல

மைல் தூரம் பயணம் செய்து நாட்டை உளவு பார்க்கின்றனர். அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு சின் பாலைவனம் செல்கின்றனர். அங்கிருந்து ஆமாத்து நுழைவாயிலருகில் இருந்த இரகேபு வரையிலும் சென்று நாட்டை உளவு பார்த்தனர் என பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆமாத்து கானான் நாட்டின் வடபகுதியில் உள்ளது. உளவு பார்க்கச் சென்றவர்கள் நாற்பது நாள்கள் நாட்டை உளவு பார்க்கின்றனர் (எண் 13:21, 25). அவர்கள் திரும்பி வரும்போது எசுக்கோல் பள்ளத்தாக்கிலிருந்து ஒரு திராட்சைக் குலை, மாதுளம் பழங்கள், அத்திப் பழங்கள் சிலவற்றைக் கொண்டு வருகின்றனர். அவர்கள் உளவு பார்த்த நாட்டைப் பற்றி மோசேயிடம் கூறும்போது, நீர் எங்களை அனுப்பிய நாட்டுக்கு நாங்கள் சென்று வந்தோம்; அதில் பாலும் தேனும் வழிந்தோடுகிறது (எண் 13:27) எனக் கூறுகின்றனர்.

பாலும் தேனும் வழிந்தோடுகிறது என்ற சொற்றொடர் இந்த நிலம் ஆடு மாடு மேய்ப்பதற்குச் சிறந்ததாக உள்ளது என்பதைக் கூறுவதாகக் கொள்ளலாம். பால் மந்தைகளிலிருந்து பெறக்கூடியது. தேன் இயற்கையிலிருந்து கிடைக்கக்கூடிய ஒரு பொருள். பாலைவனப் பகுதிகளில் தேனிக்கள் கூடுகட்டி வாழ்வது அரிது. எனவே தேனீக்களிலிருந்து பெறக்கூடிய தேன் இங்கே குறிக்கப்படவில்லை எனலாம். இச்சொற்றொடரில்; வருகின்ற தேன் பேரீட்சைப் பழங்களைக் குறிப்பதாகக் கருதலாம். பாலைவனப் பகுதிகளில் பேரீட்சை மரங்கள் அதிகமாக வளர்வதற்கு வாய்ப்புகள் உண்டு. எனவே பாலும் தேனும் வழிதோடுகிறது என்ற சொற்றொடர் மந்தைகளை வளர்ப்பதற்கு ஏற்ற நாடு என்பதாகக் கொள்ளலாம். இஸ்ரயேல் மக்கள் ஆடு மாடுகளை மேய்த்து வாழ்ந்தவர்கள். எனவே அவர்கள் குடியிருப்பதற்கு ஏற்ற நாடாகக் கானான் நாடு உள்ளது என அவர்கள் கூறியிருக்கலாம்.

அவர்கள் நாட்டின் வளமையைப் பற்றிக் குறிப்பிட்டதுடன் நிறுத்தவில்லை. அந்த நாட்டில் வாழ்பவர்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றனர். கானான் நாட்டில் குடியிருப்பவர்களாக ஐந்து இன மக்களை உளவாளிகள் குறிப்பிடுகின்றனர். அவர்கள் முறையே, அமலேக்கியர், இத்தியர், எபூசியர், எமோரியர் மற்றும் கானானியர் (எண் 13:29). அமலேக்கியர் ஈசாக்கின் மூத்த புதல்வனான ஏசாவின் வழிமரபினர் (தொநூ 36:15). இவர்கள் நாடோடிகளாக வாழ்ந்தவர்கள். நெகேபு பகுதிகளிலும் சீனாய் பாலைவனத்திலும் குடியிருந்தார்கள். இத்தியர்கள் சிரியாவின் சில பகுதிகளிலும் கானானின் சில பகுதிகளிலும் வாழ்ந்தார்கள். இவர்களில் பலரும் செமித்தியப் பெயர்களைக் கொண்டிருந்தார்கள். எபூசியர்கள் எருசலேமைச் சுற்றிய பகுதிகளில் வாழ்ந்தார்கள். எமோரியர்கள் சிரியாவைச் சார்ந்தவர்களாக இருக்கலாம் என பல அறிஞர்களும் கருதுகின்றனர். இவர்கள் கானான் நாட்டில் பரவி வாழ்ந்தார்கள். கானானியர்கள் கானான் நாட்டில் குடியிருந்தவர்கள். இவர்களும் வெளியிலிருந்து வந்து

குடியேறியவர்கள்தான் என பல அறிஞர்களும் கருதுகின்றனர். இவர்கள் அரண் சூழ்ந்த நகரங்களை எழுப்பி வாழ்ந்தார்கள்.

உளவாளிகளில் பெரும்பாலானவர்கள் அந்நாட்டில் வாழும் மக்கள் வலிமைமிக்கவர்கள்; நகர்கள் அரண் சூழ்ந்தவை, மிகப் பெரியவை; அத்துடன் ஆனாக்கின் வழி மரபினரையும் நாங்கள் அங்குக் கண்டோம். எனவே நாம் அம்மக்களுக்கு எதிராகப் போகமுடியாது; ஏனெனில் அவர்கள் நம்மிலும் வலிமைமிக்கவர்கள் (எண் 13:28, 31) என்கின்றனர். ஆனால் யோசுவாவும் காலேபும் நாம் உடனடியாகப் போய் நாட்டைப் பிடித்துக் கொள்வோம்; ஏனெனில் நாம் அதை எளிதில் வென்றுவிட முடியும் எனக் கூறுகின்றனர். யோசுவாவும் காலேபும் அவ்வாறு கூறுவதற்கு அடிப்படைக் காரணம் முற்காலத்தில் யஸவே கடவுள் செய்த அரும்செயல்கள். யாவே கடவுளின் உதவியுடன் கானான் நாட்டை கைப்பற்றலாம் என அவர்கள் நினைக்கின்றனர். எகிப்திய பார்வோனைக் கடவுள் வெற்றி கொண்டதையும் பார்வோனின் படைவீரர்களை செங்கடலில் மூழ்கச் செய்ததையும் தங்கள் கண்களால் கண்டவர்கள் அவர்கள். கடவுள் பார்வோனை வெற்றிகொள்ள முடிந்ததென்றால் எரிகோ நகரை இஸ்ரயேல் வெற்றிகொள்ளச் செய்ய அவரால் முடியும் என கருதுகின்றனர். அதையே மக்களுக்கும் கூறுகின்றனர் (எண் 14:8-9). உளவாளிகளின் இந்த முரண்பாடான செய்திகள் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. மக்கள் பெரும்பாலான உளவாளிகள் கூறிய கருத்துக்களையே ஏற்கின்றனர். அவர்கள் கூறுவதில் உண்மை இருப்பதாகக் காண்கின்றனர். அரண் சூழ்ந்த நகர்களை வெற்றிகொள்வது எளிதான ஒன்றல்ல. இந்த நிகழ்வை பிற்காலத்தில் நினைவு கூர்கையில் வானளாவிய மதில்கள் கொண்ட மாபெரும் நகர்கள் என உளவாளிகள் கூறியதாக மோசே கூறுகிறார். அரண் சூழ்ந்த நகர்களை வெற்றிகொள்ள வேண்டுமென்றால் அந்த நகர்களை முற்றுகையிடவேண்டும். நகரிலிருந்து எவரும் வெளியேறாமல் செய்து அந்த நகரில் உள்ளவர்களைப் பசியால் வாடச்செய்யவேண்டும். அதற்குப் பல மாதங்கள் அல்லது ஆண்டுகள் கூட ஆகலாம். ஒரு நகரை முற்றுகையிடுவதற்கு ஆயுதங்களும் வேண்டும். இஸ்ரயேல் மக்களிடம் ஆயுதங்கள் கிடையாது; நகர்களை முற்றுகையிடும் அளவுக்கு எந்த வசதிகளும் கிடையாது.

உளவாளிகள் அங்கு வாழ்ந்த மக்களைப்பற்றிக் கூறிய கருத்துக்களும் உண்மையானவைதான். உளவு பார்க்கும்படி நாங்கள் சென்றிருந்த நாடு தன் குடிமக்களையே விழுங்குவதாய் இருக்கிறது; அதில் நாங்கள் கண்ட மனிதர் அனைவரும் மிகவும் நெடிய உருவத்தினர்; அத்துடன் நெப்பிலிமிலிருந்து வருகிற ஆனாக்கின் புதல்வராகிய அரக்கரையும் கண்டோம்; எங்கள் பார்வையில் நாங்கள் வெட்டுக்கிளிகள் போன்றிருந்தோம்; அவர்களுக்கும் நாங்கள் அவ்வாறே காணப்பட்டோம் (எண் 13:32-33) என்கின்றனர்.

ஆனாக்கின் புதல்வராகிய

அரக்கர்கள் போர் வீரர்கள். விவிலிய இடைக்காலத்தில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்ட விளக்கங்களைப் பார்க்கையில் இவர்கள், அரக்கர்கள், போர்வீரர்கள் மற்றும் வீழ்ச்சியடைந்த வானதூதர்கள் என பலவாறு கூறப்பட்டிருக்கின்றனர். சவுல் அரசனாக இருந்த காலத்தில் அவருடைய படையை கதிகலங்கச் செய்த கோலியாத்து என்ற அரக்கனை இங்கே நினைவு கூரலாம். எங்கள் பர்வையில் நாங்கள் வெட்டுக்கிளிகள் போலிருந்தோம் என்ற சொற்றொடரை இரண்டு விதங்களில் புரிந்துகொள்ளலாம்.

முதலாவது உருவத்தில் மிகவும் சிறியவர்கள் எனப் புரிந்துகொள்ளலாம். இரண்டாவது, வெட்டுக்கிளிகள் உணவுக்காகப் பயன்படுத்தப்படுபவை. நாம் அவர்களுக்கு இரையாகலாம் என்ற பொருளிலும் புரிந்துகொள்ளலாம். பெரும்பான்மையான உளவாளிகளின் கருத்தை மக்கள் ஏற்கின்றனர். எனவே மோசேக்கு எதிராகவும் ஆண்டவருக்கு எதிராகவும் முணுமுணுத்து கிளர்ச்சி செய்கின்றனர். மோசேயைக் கல்லால் எறிந்து கொல்ல முயல்கின்றனர். தங்களுக்கு ஒரு புதிய தலைவரைத் தேர்ந்தெடுத்து எகிப்திற்குத் திரும்பிச் செல்ல முயற்சிக்கின்றனர். காதேசு பர்னேயா என்ற இடத்தில் நடந்த இந்த நிகழ்வை சீனாய் பாலைவனத்தில் நடந்த பொற்கன்றுக்குட்டி நிகழ்வோடு ஒப்பிடலாம். சீனாய் உடன்படிக்கைக்குப் பின் மக்கள் சீனாய் பாலைவனத்தில்; தங்கியிருக்கின்றனர். மக்களை வழிநடத்திவந்த மோசே கடவுளின் கட்டளைகளைப் பெறுவதற்காக கடவுளின் மலைக்குச் சென்றிருக்கிறார். நாட்கள் பல கடந்துவிட்டதால் அவர் இனி வரமாட்டார் என நினைத்து மக்கள் ஆரோனிடம் முறையிடுகின்றனர். தங்களை வழிநடத்துவதற்குக் கடவுள் ஒருவரைக் கேட்கின்றனர். மோசே அவர்களிடமிருந்து பெற்ற பொன்னால் கன்றுக்குட்டி ஒன்றைச் செய்கின்றார். மக்கள் உடன்படிக்கையின் கடவுளை மறந்து பொற்கன்றுக்குட்டியை ஆராதிக்கின்றனர். இதைக்கண்ட கடவுள் அவர்களை அழித்தொழிக்கத் திட்டமிடுகிறார். மோசே தலையிட்டு ஆண்டவரை வேண்டுகிறார்; மக்களை மன்னிக்கக் கேட்கிறார். ஆண்டவரும் அவர்களை மன்னிக்கிறார்; அவர்களுடன் செய்த உடன்படிக்கையைப் புதுப்பிக்கிறார்.

காதேசு பர்னேயாவிலும் இத்தகைய ஒரு நிகழ்வுதான் நடக்கிறது. உளவாளிகள் கொண்டுவந்த செய்தியைக் கேட்ட மக்களின் முறுமுறுப்பைக் கண்ட கடவுள் அவர்களை அழித்தொழிக்கத் திட்டமிடுகிறார். ஆண்டவர் மோசேயிடம், எதுவரை இம்மக்கள் என்னை இழிவுபடுத்துவார்கள், நான் அவர்களுக்கு அடையாளங்கள் தந்தும் எதுவரை இவர்கள் என்னில் நம்பிக்கை கொள்ளாதிருப்பார்கள்? நான் அவர்களைக் கொள்ளை நோயால் வதைத்து அவர்களைப் புறக்கணித்துவிடுவேன்; உன்னையோ அவர்களைவிடப் பெரியதும் வலியதுமான இனமாக்குவேன் (எண் 14:11-12) எனக் கூறுகின்றார். மோசே மீண்டும் ஆண்டவரிடம் வேண்டுகின்றார். சீனாய் மலையில் வேண்டுவதைப் போலவே இங்கும் வேண்டுகின்றார் (எண் 14:13-19). அவர்களை மன்னிக்கக் கேட்கிறார்.

ஆண்டவரும் மோசேயின் வேண்டுதலுக்குச் செவிசாய்க்கிறார். அவர்களை மன்னிக்கிறார்; ஆனால் ஆண்டவரின் வார்த்தைகளில் ஒரு முக்கியமான தீர்ப்பும் தொக்கி நிற்கிறது.


ஆண்டவர் மோசேயிடம் கூறியது; உன் வாக்கின்படி நான் மன்னித்துவிட்டேன்; ஆயினும் உண்மையாகவே என் உயிர்மேல் ஆணை! பூவுலகனைத்தும் நிறைந்துள்ள ஆண்டவரின் மாட்சியின் மேல் ஆணை! எகிப்திலும் இப்பாலைநிலத்திலும் என் மாட்சியையும் நான் செய்த அருஞ்செயல்களையும் கண்டிருந்தும், இப்பத்துத் தடவையும் இம்மனிதர்கள் என்னைச் சோதித்துஎன் குரலுக்குச் செவிகொடுக்காததால், இவர்களில் ஒருவன் கூட இவர்கள் மூதாதையருக்குத் தருவதாக நான் வாக்களித்திருந்த நாட்டினைக் காணமாட்டான்; என்னை இழிவுபடுத்திய எவனுமே அதைப் பார்க்கமாட்டான் (எண் 14:20-23) என்கிறார்.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ்.cmf



# ஞாயிறு மறையுரை



அருட்பணி.ஸ்டீபன் கஸ்பார்
பங்குத்தந்தை, புனித சகாயமாதா ஆலயம், சின்னாளபட்டி, திண்டுக்கல் மறைமாவட்டம்

## கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தம் பெருவிழா ஞாயிறு

**11.06.2023**

**இணைச்சட்டம் 8/2-3, 14-16- 1 கொரிந்தியர் 10/16-17 - யோவான் 6/51-58**

இறை இயேசுவிலே எனக்கு மிகவும் பிரியமான சகோதரமே, உணவு கொடுத்தோரை கையெடுத்துக் கும்பிடணும், காரணம் அவர்கள் உயிர் கொடுத்தவர்கள். உணவு மனித வாழ்வுடன் பிண்ணிப் பிணைந்திருப்பது. பிரிக்க முடியா உறவு நிலையிலிருக்கிறது. எனவேதான் இயேசு இந்த உறவுப் பின்புலத்தில் நற்கருணையில் உணவாகிறார். பரமன் இயேசு இங்கு நம் உணவாகவே வருகிறார். தன்னையே உணவாக்கித் தன் உயிரை வழங்கி, உணவாய்த் தந்து இறைப்பிரசன்னத்தைக் கொடுக்கிறார். இதை என் நினைவாகச் செய்யுங்கள். இது என் உடல், இது என் இரத்தம் என்பதில் அவருடைய பாஸ்காப் பயணத்தை நினைவு கூறுகிறோம். நாம் கொண்டாடும் நற்கருணை இயேசுவின் விழுமியங்களை உள்ளடக்கி, அனைத்து ஆதிக்க சக்திகளை எதிர்த்துப் போராட வழி செய்கிறது. இந்த விழா ஓர் உறவுக் கொண்டாட்டம். நம்மையும் பகிர்ந்து வாழவும், பணி செய்து பயணிக்கவும் அழைப்புக் கொடுக்கும் விழா திருவுடல், திருஇரத்தப் பெருவிழாவாகும். பிறரின் சுமையைத் தாங்கும் போதும், பிறருடையத் தேவையை நிறைவுக்குக் கொண்டுவந்து, உதவிக்கரம் நீட்டினால் நாம் என் நினைவாகச் செய்யுங்கள் என்றதை நினைவு கூறுகின்றோம்.

இப்பெருவிழா நம் கிறிஸ்தவ வாழ்வின் மையமும் ஊற்றுமாய்த் திகழ்வது நற்கருணை என்ற அருளடையாளம் என்பதை உலகுக்கு உரக்கச் சொல்லும் விழா. இதனை உடன்படிக்கையின் விழா எனவும் சொல்லலாம். நம் ஆண்டவர் பெரிய வியாழன்று தம் சீடருடன் பந்தியமர்ந்த வேளையில் நற்கருணையை நிறுவினார். இந்த அடையாள விருந்தையே பெரிய வெள்ளியன்று தன் உடலைக் கிழித்துத் தன் குருதியைக் கல்வாரியில் கொட்டி அன்று அடையாளமுறையில் செய்ததைக் கல்வாரியில் நிறைவேற்றி இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்றார். இதையே திருச்சபை உலகின் எட்டுத்திக்கும் 24 மணிநேரமும் குருக்களால் இறைமக்களால் நினைவுகூறப்படுகிறது. இந்நிகழவையே இன்று நாம் கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தப் பெருவிழாவாகக் கொண்டாடுகின்றோம். இது பழைய ஏற்பாட்டில் மோசே வழியாக இஸ்ரயேல் மக்களுடன் செய்த உடன்படிக்கைபோல அல்ல. அது பழைய உடன்படிக்கை, ஆனால் புதிய ஏற்பாட்டில் ஆண்டவர் இயேசு புதிய இஸ்ரயேலான நம்முடன் கல்வாரியில் செய்து கொண்ட புதிய உடன்படிக்கையாகும. புதிய உடன்படிக்கையை நினைவுகூறும் நாளே இந்நாள் விழாவாகும்.

இந்த விழா நமக்குக் குறித்துக் காட்டும் பாடம் என்னவென்றால், நாமும் இறை இயேசுவோடு செய்துகொண்ட உடன்படிக்கையில் இறுதிவரை நிலைத்து நின்று

அந்த உடன்படிக்கையின் கல்வாரிப் பலியில் நித்தமும் பங்கெடுத்து நம்மை அர்த்தமுள்ளவிதத்தில் கொண்டாட அழைக்கின்ற நாளும் கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தப் பெருவிழா நாளாகும்.

ஒவ்வொரு முறையும நற்கருணைக் கொண்டாட்டத்திலே கிறிஸ்துவின் இறப்பும் உயிர்ப்பும் நம்மாலே நினைவுகூறப்படுகிறது. இந்த நற்கருணை முக்காலத்தையும் தன்னகத்தே கொண்டதது. நம்மை கிறிஸ்துவோடு இணைக்கிறது. எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்பவன் என்னோடு இணைந்திருப்பாரென இன்றைய நற்செய்தி யோவான் 6/56ல் வாசித்தோம். எனவே இவ்விழாவை உடன்படிக்கையின் விழா மட்டுமன்று, உறவின் விழாவெனவும் நாம் அழைக்கலாம். நற்கருணையை நாம் அருந்துவதால் நாம் அவராகவே மாறுகிறோம். இதையே பவுல் இனி வாழ்வது நானல்ல, இயேசுவே என்னில் வாழ்கிறார் என கலாத்தியர் 2/20ல் சொல்லுகிறார். நற்கருணை கிறிஸ்துவோடு மட்டுமல்லாது மற்றவரோடும் நம்மை இணைக்கிறது.

அன்பான இறைச்சமூகமே இந்த இடத்தில் நான் உள்வாக்கிய ஒரு நிகழ்வைப் பதிவு செய்திட விரும்புகிறேன். ஒரு 14 வயது சிறுவன் தினமும் தன் ஆடுகளை மேய்ச்சலுக்காய் ஓட்டிக்கொண்டு அருகிலுள்ள மலைப்பகுதிக்குச் செல்வான். செல்லும் வழியில் ஒரு புகைவண்டிப் பாதை, பாலம் இருக்கும். அந்தப் பாலத்தைத் தாண்டியே மலைப்பகுதிக்கு ஆடுகளை ஓட்டிச் செல்வான். ஒவ்வொரு நாளும் காலையும், மாலையும் அந்தப் புகைவண்டித் தடத்தில் ஒரு புகைவண்டி காலை வந்து மாலை திரும்பும். அந்தப் புகைவண்டி இவனுக்கு நண்பராகிவிட்டார். காலை குட் மார்னிங் சொல்லுவான், மாலை குட் ஈவினிங் சொல்லுவான். இருவரிடையே நட்பும் உறவும் மலர்ந்தது. ஒரு சில நாட்கள் மாலையில் புகைவண்டி வரக் காலம் தாழ்த்தினால், நின்று காத்து நண்பருக்கு குட் ஈவினிங்க சொல்லிவிட்டே வீடு திரும்புவான்.

அந்தோ ஒருநாள் பெருமழை மாலை 4 மணியிலிருந்து கொட்டோ கொட்டென பொழிந்தது. நேரம் ஆகஆக வெள்ளம் பெருக்கெடுத்தது. ஆடுகளை வீடுநோக்கி விரட்டிவிட்டு கொட்டும் மழையில் நண்பனுக்காய் காத்திருந்தான். புகைவண்டிப் பாதையில் ஏறி எதிர்திசையில் புகைவண்டியை நோக்கி அபாயமிட்டுக்கொண்டே ஓடினான் சிறுவன்.

அவன் எதிர்த்து ஓடிவருவதைக் கண்ட நண்பர் வண்டிக்கு பிரேக் போட்டார். வண்டி நின்றது. ஆச்சிறுவனை நசுக்கி நின்றது. அவனுடைய உடல் சிதைந்து சின்னாபின்னமாய்ச் சிதறியது. புகைவண்டி இடையில் நின்றதால் பயணிகள் இறங்கி நடப்பது என்னவென்று பார்த்தனர். வண்டி நின்ற இடத்திலிருந்து 100 மீட்டர் தூரத்தில் பாலத்தில் தண்டவாளம் மட்டும தொங்கியது. பாலத்தில் வெள்ளம் ஓடியது. அதைப் பார்த்துவிட்டு புகைவண்டி இயக்குனர் நோக்கி ஓடினார். ஆனால் அவரோ எதிர் திசையில் அவர்களுக்குமுன் ஓடி நின்று கதறிக் கதறி அழுதார். பயணிகள் இயக்குனருக்கு பாராட்டும், நன்றியும் சொன்னார்கள். பேராபத்திலிருந்து எங்களைக் காத்த நீங்கள் தெய்வம் என்றனர். ஆனால் புகைவண்டி இயக்குனர், நம்மைப் பேராபத்திலிருந்து காத்தவன் என் நண்பனேதான். இவனே உண்மையான தியஸகி. ஆம் இன்று நாம் கொண்டாடும் விழாவின் கதாநாயகன் இயேசு ஆண்டவர். நம் பாவங்களுக்காய் அவர் கல்வாரியில் சிலுவையில் சிதைந்து சின்னாபின்னமானார். அவரே, தன் நண்பர்களுக்காய் உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு வேறு எதுவுமில்லை என்றார்(யோவான்15/13). இவர் சொன்னதையே, தன்னை சிதைத்து தன் உயிரைத் தந்து நம்மைப் பேராபத்திலிருந்து காத்தவன் என் நண்பனே. அவன் ஒரு தியாகி ஆகிவிட்டான். கல்வாரி நாயகன் இயேசுவை நமக்கு வாழ்ந்து காட்டிவிட்டான்.

ஆம் பெரிய வியாழனன்று அன்பின் அடையானச் சின்னமான நற்கருணையை நிறுவ, அதனைக் கல்வாரியில் வெள்ளியன்று செய்து இதை என் நினைவாகச் செய்யுங்களென்றார்.


இந்நிகழ்வையே இன்று கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தப் ரெுவிழவாகக் கொண்டாடுகின்றோம். இயேசு செய்த புதிய உடன்படிக்கை, உறவின் விழா இது.

நம் பகையை மறந்து, பாவத்தை வெறுத்து உறவுக்குக் கை கொடுத்து, முறிந்த உடைந்த நம் உறவுகளைக் கட்டி எழுப்பி பிறருக்காய் நாமும் வாழ்வோம்.ஆமென்.



# இயேசுவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா

**இச 8:2-3, 14-16, கொரி 10:16-17, யோவா 6:51-58**




**பா. சேவியர்**
திண்டுக்கல்


**11-06-2023**

## திருப்பலி முன்னுரை

கிறிஸ்துவின் தூய்மைமிகு திரு உடல், திரு இரத்தப் பெருவிழா திருப்பலி வழியாக ஒரே அப்பத்தில் பங்கு கொண்டு, நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கின்றோம் என்பதை உறுதிப்படுத்த வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே உங்கள் அனைவரையும் இன்றைய திருவழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

ஆண்டவர் இயேசு தம் திரு உடலையும், திரு இரத்தத்தையும் உணவாகவும் பானமாகவும் தரும் பேரன்பை இன்று பெரு விழாவாகக் கொண்டாடி மகிழ தாய்திருச்சபை நம்மை அழைக்கிறது. இன்றைய விழா இயேசுவின் மாபெரும் தியாகத்தை நினைவுப்படுத்து கிறது.

இயேசு தரும் உணவாகிய அவரது திரு உடலை உண்டு, அவரது திரு இரத்தத்தைப் பருகுவதன் வழியாகத்தான் முடிவில்லா வாழ்வைப் பெற முடியும் என்பதை இன்றைய வழிபாட்டின் வழியாக இயேசு நமக்கு உணர்த்துகிறார்.

இறுதி உணவு வேளையில் கிறிஸ்து ஏற்படுத்திய நற்கருணைப் பலியே நம் கத்தோலிக்க வழிபாட்டின் மையமாக விளங்குகிறது. நற்கருணை - ஆண்டவரின் பிரசன்னத்தை வெளிப்படுத்தும் ஓர் அடையாளம். திருச்சபை நற்கருணையை உருவாக்கு கிறது. நற்கருணை இறை சமூகத்தை உருவாக்குகிறது.

அன்று இறுதி இரவு உணவு வேளையில் நிகழ்ந்த அதே நற்கருணைப்பலி இதோ இத்திருப் பீடத்தில் மீண்டும் அரங்கேறுகிறது. இயேசுவின் இருபுறமும்அமர்ந்து அக மகிழ்ந்து பங்கேற்ற சீடர்களைப் போல நாமும் இத்திருப்பலியில் ஆர்வமுடன் பங்கெடுப்போம்.

கொடுக்கும்போதும் பெறும் போதும் கொடுப்பவன் நிறை கிறான், பெறுபவன் மகிழ் கிறான். இத்திருப்பலி வழியாக இறைவனின் திரு உடல் திரு இரத்தத்தைப் பெற்று மகிழ, பெற்றதை மற்றவருக்குக் கொடுத்து மகிழ, அதன் மூலம் நிறை வாழ்வைப் பெற, நிலை வாழ்வை அடைய இத்திருப் பலி வழியாக இறையருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

துன்பத்திலும் துயரத்திலும் ஆண்டவர் தம் மக்களோடு இருக்கிறார் என்பதற்கு எடுத்துக் காட்டாக இன்றைய முதல் வாசகம் அமைகிறது. பாலைவனத்தில் பசியால் வாடிய மக்களுக்கு கடவுள் வழங்கிய மன்னா என்னும் உணவு திவ்ய நற்கருணையின் முன் அடையாளம் என்பதை உணர்த்தும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

ஆண்டவர் தம் இறுதி இராவுணவில் நற்கருணையை நம் உணவாக, திருச்சபையின் பலியாக ஏற்படுத்தினார். அப்பம் பிட்குதல் என்ற வழிபாட்டுச் சடங்கின் வழி யாக நமதாண்ட வரின் மரணமும் உயிர்ப்பும் பிரசன்னமாயின. திருப் பலியில் திருவிருந்தில் நாம் பங்கு கொள்வதால் ஏற்படும் விளைவு கள் குறித்து பவுலடியார் தரும் விளக்கங்களைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) அன்பு இறைவா, உம் திருச்சபை யை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் அனைவரும் உம் மறை பொருளான பிரசன்னத்தை உணர்ந்தவர்களாய் வாழவும், உம் வார்த்தையிலே இணைந்திருந்து உம் திருச்சபையை சிறப்புற வழிநடத்திச் செல்லவும் தேவையான ஆன்ம பலத்தையும், உடல் நடத்தையும் அவர்களுக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2) அன்பு இறைவா, உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் அனை வரும் நற்கருணைப் பலியின் மேன் மையையும், அதன் உண்மைத் தன்மையையும் உணர்ந்து கத்தோலிக்கத் திருச்சபையில் ஒன்றிணையும் மன நிலையை அவர்கள் பெறவும், உம்முடைய மக்களாகிய நாங்கள் உமது ஆவியால் இயக்கப்பட்டு உமது கட்டளைகளுக்குப் பணிந்து நடந்து உம் சீடர்களாக வாழவும் அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) அன்பு இறைவா, எம் தாய் திரு நாட்டை ஆளுகின்ற தலைவர்கள், அதிகாரிகள் அனைவரையும் ஆசீர்வதியும். அவர்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து தியாக மனப்பான்மையுடனும் பொதுநல எண்ணத்துடனும் கடமையாற்றி, நாடும் மக்களும் முன்னேற வேண்டு மென்ற வேட்கையுடன் திறம்பட செயல்பட அவர்களுக்கு சிறந்த ஆற்றலையும் சீரிய சிந்தனையையும் தந்தருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.


4) அருள் வாழ்வின் ஊற்றான தந்தையே இறைவா, குடும்பப் பிரச்சனைகளால், கடன் தொல் லைகளால், நோய் நொடிகளால் அமைதியிழந்து வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவர் மீதும் மனமிரங்கும். உமது இரக்கத் தையும் கருணையையும் அவர்கள் மீது பொழியும். பிரச்சனைகள் தீர்ந்து அவர்களது உள்ளத்திலும் இல்லத்திலும் அமைதி நிலவவும், நிம்மதி பெருகவும் அருள் புரிய வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# இயேசுவின் தூய்மைமிகு இதயம்

**19-06-2023**

இச. 7:6-11, 1 யோவா. 4:7-16, மத்.11:25-30



பா. சேவியர்
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

கடவுளாகிய ஆண்டவர் தம் சொந்த மக்களாகத் தேர்ந்து கொண்ட ஆண்டவரின் தூய மக்களினமே, உங்கள் அனைவரையும் இயேசுவின் தூய்மைமிகு இதயம் பெருவிழா வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இயேசுவின் அன்புக்கு அளவில்லை. எல்லையில்லை, அவர் நம் மீது கொண்டுள்ள அன்பின் ஆழத்தை உணர்ந்து, அவ்வன்புக்கு பதிலன்பு காட்டும் முயற்சியே இத்திருவிழா. இரக்கத்தையும் கனிவையும், மன்னிப்பையும் மட்டுமே பிரதிபலிக்கக்கூடிய இயேசுவின் அன்பு இதயம் அவரின் இரக்கக்கடலில் சங்கமமாகிட நமக்கு அன்பு அழைப்புத் தருகிறது.

இயேசு நம்மோடு இருந்தால் இயேசுவின் இதயத்தில் நாம் இருந்தால், வாழ்வின் எந்த சுமையும் சுகமானதாகிவிடும் என்பதை இன்றைய விழா எடுத்துரைக்கிறது. என்னிடம் வாருங்கள், என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள், என்னிடம் இளைப் பாறுதல் என இயேசு இன்றைய திருப்பலி வழியாக நம்மை அழைக்கிறார்.

இயேசுவின் திருஇருதயப் பெருவிழாவை கொண்டாடும் இந்த நல்ல நாளில் இயேசுவின் இதயத்தில் சுரக்கும் எல்லையில்லா அன்பை, மன்னிப்பை, இரக்கத்தை நாமும் பெற்று அவற்றை வாழ்வாக்கி வாழ்வோம். ஒருவர் மற்றவரை அன்பு செய்து வாழ்வோம். அதன் வழியாக இறைவன் அளிக்கும் முடிவில்லா வாழ்வைக் கொடையாகப் பெறுவோம்.

இயேசுவின் தூய இதயத்தில் ஊற்றெடுக்கும் அன்பை, மன்னிப்பை, இரக்கத்தை நாம் ஒவ்வொருவரும் பெற்று, பெற்றவற்றை பிறரோடு பகிர்ந்து, இறை இயேசுவுக்கு சாட்சியாக வாழ இத்திருப்பலி வழியாக அவரது அருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

இஸ்ரயேலரை இறைவன் தேர்ந்து கொண்டதையும், அவர்கள் மீது அன்பு செலுத்தியதையும் இன்றைய முதல் வாசகம் விளக்குகிறது. இயேசுவின் திரு இருதய அன்பை முன் அறிவிப்பாக எடுத்துக் கூறும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

நாம் கேட்கவிருக்கும் இன்றைய இரண்டாம் வாசகத்தில் இறைவனது அன்புப் பிரவாகமாய் பொங்கிப் பெருகுவதை நம்மால் உணர முடிகிறது. அன்பே கடவுள் என்ற உண்மையை வெளிப்படுத்தி நம்மை அன்பு வாழ்வுக்கு அழைக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.



# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

பொறுமையாக இரு இங்கு இறுதிக் கட்டத்தில்
மாறிய ஆட்டங்கள் உண்டு

நிலைமை மாறினால் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்பது பொய்
மகிழ்ச்சியாக இருந்தாலே நிலைமை மாறிவிடும் என்பதே உண்மை

விதி என்று ஒன்று இருந்தால்
விதிவிலக்கு என்று ஒன்று இருந்தே தீரும்

பொறுமையாக இருக்கத்தான் தைரியம் வேண்டும்
மற்றபடி கோபம் நாய்க்குக்கூட வரும்

சரியோ, தப்போ தைரியமாகப் பேசக் கத்துக்கோ
இல்லன்னா பாதித் தப்ப உன் தலைல கட்டிருவாய்ங்க

ஒருவர் இப்படித்தான் என்று முடிவானபிறகு
அவர்களை மாற்ற முயற்சி செய்யக்கூடாது...அது நம் வேலையில்லை
நாம்தான் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்

சில முற்றுப்புள்ளிகள் முழுமனதுடம் வைக்கப்படுவதில்லை
சில காலத்தின் கட்டாயம், சில காயத்தின் கட்டாயம்

துணிந்தால் துளிர்ப்போம்
தயங்கினால் இழப்போம்

தேடிப்போய் அசிங்கப்படுவது அன்பர்கள்
தேடிவந்தவங்களை அசிங்கப்படுத்துவது பொய்யர்கள்

ஆறு வயதுக் குழந்தையிடம் ஒன்றை விளக்கத் தெரியவில்லை என்றால்
நீ அதனை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம்
–ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

படுத்தே இருப்பவனுக்கு பாய் பகை
பேசியே திரிபவனுக்கு வாய் பகை
முன்னேற பாயைச் சுருட்டு
நிம்மதிக்கு வாயைச் சுருக்கு



# திருப்பலி வாசகங்கள்

## பொதுக்காலம் 10ம் வாரம்

## 11.06.2023 முதல் 17.06.2023

11.06.2023 – கிறிஸ்துவனின் திருவுடல், திருஇரத்தம் பெருவிழா ஞாயிறு

இணைச்சட்டம் 8/2–3, 14–16

1 கொரிந்தியர் 10/16–17

யோவான் 6/51–58

12.06.2023 – பொதுக்காலம் 10ம் வாரம் – திங்கள்

2 கொரிந்தியர் 1/1–7

மத்தேயு 5/1–12

13.06.2023 – பொதுக்காலம் 10ம் வாரம் – செவ்வாய்

2 கொரிந்தியர் 1/18–22

மத்தேயு 5/13–16

14.06.2023 – பொதுக்காலம் 10ம் வாரம் – புதன்

2 கொரிந்தியர் 3/4–11

மத்தேயு 5/17–19

15.06.2023 – பொதுக்காலம் 10ம் வாரம் – வியாழன்

2 கொரிந்தியர் 3/15–4/1, 3–6

மத்தேயு 5/20–26

16.06.2023 – பொதுக்காலம் 10ம் வாரம் – வெள்ளி

இயேசுவின் திருஇருதம் பெருவிழா

இணைச்சட்டம் 7/6–11

1 யோவான் 4/7–16

மத்தேயு 11/25–30

17.06.2023 – பொதுக்காலம் 10ம் வாரம் – சனி

நற்செய்தி வாசகம் தூய கன்னி மரியாவின்
மாசற்ற இதயம் நினைவுக்கு உரியது

2 கொரிந்தியர் 5/14–21

லூக்கா 2/41–51

18.06.2023 – பொதுக்காலம் 11ம் வாரம் – ஞாயிறு

விடுதலைப் பயணம் 19/2–6

உரோமையர் 5/6–11

மத்தேயு 9/36–10/8







# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 49

அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பதில்லாயின் நன்று

### குறள் விளக்கம்

அறம் என்று சிறப்பித்து சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ஆகும். அதுவும் மற்றவன் பழிக்கும் குற்றம் இல்லாமல் விளங்கினால் மேலும் நன்மையாகும்.

### சிந்தனை

அந்தக் கடை முதலாளி புதிய தொழில்களில் ஈடுபட்டதால் கடையில் அதிகக் கவனம் செலுத்தவில்லை. உடனே பணியாளர்கள் பலருக்கும் கவனம் சிதறியது. சரியாக வேலை பார்க்காதவர்களை முதலாளி வேலையைவிட்டு உடனே நிறுத்திவிட்டார். விரைவில் கடையை மூடிவிடுவார் என்ற வதந்தி பரவியது. எளிய வேலையில் இருந்த பெண் ஒருத்தி முதலாளிக்கு நினைவூட்ட வேண்டியதை நினைவூட்டினாள். அந்தப் பெண்ணுக்குப் பொது மேலாளர் பதவி கிடைத்தது. தள்ளிப் போகிறவர்கள் தவறிவிடுகிறார்கள். முன் வந்து செய்பவர்கள் முன்னுக்கு வருகிறார்கள்.



இங்கு அறம் என்றால் இல்வாழ்க்கை: இல்வாழ்க்கை என்றால் அறம் என்று கூறுகிறார் வள்ளுவர். ஆனால் பிறர் பழித்தும் சொல்ல முடியாத அளவுக்கு இருக்கும் என்றால் அறமும் இல்வாழ்க்கையும் ஒன்றுதான் என்று கூறுகிறார். குற்றம் காணுதலும் பழி சுமத்துதலும் குடும்ப வாழ்க்கையில் மலிந்துள்ளன. அதற்கு இடமில்லா வகையில் அறவாழ்வு இடம் பெற்றால் அதுவே உண்மையான இல்வாழ்க்கை.

வேதாகமத்தில் இறைமகன் இயேசுவை பலர் பழித்துரைத்தார்கள். ஆனால் பிலாத்து இயேசுவிடம் நான் எந்த குற்றத்தையும் காணவில்லை என்று பகிரங்கமாக அறிவித்தார். பிலாத்து தலைமைக் குருக்களையும் மக்கள் கூட்டத்தையும் பார்த்து, இவரிடம் நான் குற்றம் ஒன்றும் காணவில்லை என்று கூறினார். லூக் 23:4.

பிறர் குற்றம் காண இயலாவண்ணம் நமது அறவாழ்வு அமைந்துவிட்டால் அதுவே சிறந்த இல்வாழ்வு ஆகும்.





திரு.ஜெ.அம்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்

# நலம் தரும் இயற்கை வளம்



நலம் தரும் இயற்கை வளம்.
உறவுகளே இனிய வணக்கம்.
நாளும் இயற்கை மருத்துவம்
புற்றுநோயை குணப்படுத்தும் ‘அபூர்வ இலை
முருங்கை கீரை.
பொதுவாக குழந்தைகளுக்கு கீரை வகைகளை கண்டாலே பிடிக்காது.
ஆனால் அவர்கள் அடம்பிடிக்கிறார்கள் என்பதற்காக
கீரைகளை அவர்களுக்கு கொடுக்காமல் விட்டுவிடாதீர்கள்.
எல்லா கீரை வகைகளிலும் எக்கச்சக்க ஊட்டச்சத்துக்கள் உள்ளன.
இதற்கு எந்த வகையிலும்
முருங்கை கீரை துளி அளவும் குறைந்தது இல்லை.
இதில் பல்வேறு வகையான சத்து பொருட்கள் இருக்கிறது.
ஊட்டச்சத்துக்கள் :-
வைட்டமின் ஏ
வைட்டமின் பி1இ பி2இ பி3இ பி6
கால்சியம்
பொட்டாசியம்
இரும்பு சத்து
பாஸ்பரஸ்
ஜின்க்
மெக்னீசியம்
அத்துடன் இதில் மிக குறைந்த அளவே கொழுப்புகள் உள்ளது.

## புற்றுநோயை தடுக்குமா..?

உண்மையிலேயே முருங்கை கீரை புற்றுநோயை தடுக்க பயன்படுவதாக ஆரய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.
இது புற்றுநோய் கட்டிகள் உடலில் உருவாவதை முன்கூட்டியே தடுக்கும்.
அத்துடன் புற்றுநோய் கட்டிகளை அழிக்க
இது நன்கு உதவுகிறது.
பென்சயில் இசோதியோசைனட் (benzyl isothiocyanate) என்னும் மூல பொருள் முருங்கையில் அதிகம் உள்ளதால்
புற்றுநோய் ஏற்படாமல் காக்கும்.
எனவே புற்றுநோயை தடுக்கும் ஆற்றல்
இயற்கையகவே முருங்கைக்கு உள்ளது.
கல்லீரலை சுத்தம் செய்யும்
நுரையீரலில் புற்றுநோய் செல்கள் உருவாவதை தடுக்கும்
உடலில் உள்ள புற்றுநோய் கட்டிகளை அழிக்கும்
எதிர்ப்பு சக்தி மண்டலத்தை உறுதிப்படுத்தும்

## எவ்வாறு புற்றுநோயை குணப்படுத்தும் ..?

தினமும் முருங்கை கீரையின் சாற்றை 300 ml குடித்து வந்தால்
புற்றுநோய் கட்டிகளை எளிதில் உடலில் இருந்து நீக்க முடியும்.
எதிர்ப்பு சக்தி மண்டலத்தை வலிமையாக்கி வெள்ளை ரத்த அணுக்களை அதிகரிக்கிறது.
இதில் உள்ள நியாஸிமிஸின் (niazimicin) என்ற மூல பொருள்
ஆரம்ப கட்டத்தில் இருக்கும் புற்றுநோய் செல்களை சிறிது சிறிதாக அழிக்கவும்
செல்கள் வளர்ச்சியை முற்றிலுமாக தடை செய்கிறது.

## தினமும் முருங்கையா..?

தினமும் முருங்கை கீரையை மட்டும் சாப்பிடாமல்
ஒவ்வொரு நாளும் வெவ்வேரு கீரைகளை உட்கொள்ளுதல்
அதிக ஆரோக்கியத்தை பெறலாம்.
புற்றுநோய்க்கு மட்டுமில்லாமல் இது பல பயன்களையும் கொண்டுள்ளது.

## பயன்கள்

உங்கள் தோல் சார்ந்த அனைத்திற்கும் ஒரு மிக சிறந்த மருந்து முருங்கையே.

உங்கள் சருமத்தை எப்போதும் சுத்தமாகவும், கிருமிகளிடம் இருந்தும் பாதுகாக்கலாம்.
முடி உதிரும் பிரச்சினையே நம்மில் பலருக்கு பலவித வியாதிகளையும் தர வல்லது.
கல்லீரல் பாதிப்படைவதை தடுத்து நோய்களில் இருந்து காக்கும்.
ரத்த சோகை உள்ளவர்களுக்கு முருங்கை சரியான தீர்வு.
இதில் அதிகம் இரும்பு சத்து உள்ளதால்
ரத்தத்தை நன்கு சுரக்க செய்து சீரான முறையில் இருக்க வைக்கும்.
செரிமான கோளாறுகள் அதிகம் ஏற்படுபவர்கள்
முருங்கை கீரையை சூப் போல குடித்து வந்தால் மலச்சிக்கல் குணமடையும்.
உடலில் பாக்டீரியாக்களை கொன்று எந்தவித நோய் தொற்றும் இல்லாமல் பாதுகாக்கும்.
அத்துடன் குடல் புண்களையும் சரி செய்யும்;
முருங்கை கீரையில் அதிகம் கால்சியம் இருப்பதால்
எலும்பு சம்பந்தமான நோய்கள் ஏற்படாமல் தடுக்கும்.
மேலும் எலும்புகளுக்கு அதிக உறுதியை தரும்.
எலும்பு தேய்மானம் உள்ளவர்கள்
முருங்கை கீரையை வாரத்திற்கு
4 முறை உணவில் சேர்த்து கொண்டால் நல்லது.
இன்று அதிக பேர் அவதிப்படும் ஒன்று மன அழுத்தமே.
முருங்கை இதற்கு நல்ல தீர்வை தருகிறது.
மேலும் பசியின்மையை போக்கி பசியை தூண்டும்.



நன்றி
எம் உறவுகளே..!
என்றும்
உங்கள்
அன்பு
சகோதரன்.
ஜே. அன்புரோஸ்.
நலநெறியாளன்
9360456063